முருகப்பெருமான் துணை

**மகான் பேயாழ்வார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.04.2023,** திங்கட்கிழமை

1. ஞானவான்களை உலகமெல்லாம்
நம்பிக்கையூட்டி உருவாக்கிட
தானதருமக் கொள்கை தாங்கி
தவசியாக வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது சேல்திங்கள்
வரங்களென இருபான்திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 20 ம் நாள், 03.04.2023, திங்கட்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை பேயாழ்வார் யானும்
அரங்கன் வழி மக்கள் தேறிட
ஆசிவழி மகத்துவம்பெற உரைப்பேன்
அரங்கமகான் தரும் தீட்சை
4. தீட்சையதும் ஆறுமுகக் கடவுளே
தருகின்ற தீட்சை ஆகும்
மாட்சிமைபட மக்கள் ஏற்று
மகாமந்திர செபதப முறை
5. முறையாக நித்ய பூசையாக
முழுமைபட தடையற மக்கள்
குறைவின்றி செய்து வர
கும்பமுனியே வழிநடத்தி தந்த
6. தந்த அரங்கமகா ஞானியின்
தருமவழியாம் அன்னதானமதை
சிந்தைதனில் ஏற்று மக்கள்
சேவையாகத் தொடர்ந்து செய்ய
7. செய்யவே தரும சக்தி பலமும்
செப்பிடுவேன் தொண்டர்கட்கு
அய்யம் சோர்வு கருமவினை தொடரா
அகற்றி ஆற்றல் பலம் கூட்டி

8. கூட்டியே குருவரங்கன் பலம்
குறைவின்றி துணையாய் வர
கட்டமிலா ருணமில்லாதபடி
கடமைகளை சரிவர முடிக்கும்

9. முடிக்கும் சக்தி முழுமைதனை
முழுமைபெற்ற ஞானிகள் ஆசி
தேடிவரவே சிறப்பாய் ஆற்றி
தேவைக்கு மேலான அருள் பொருள்வளம்

10.வளம்பல கூடி தொண்டர்கள்
வறுமை தனை உலகை விட்டே
பலம்கொண்டு விரட்டும் செல்வந்த
பலம் பக்குவம் நிறைந்தவர்களாக

11. ஆகவே தொண்டர்படை களெல்லாம்
ஆற்றல்பட நிலைகள் மாறி
யுகமாற்றம் செகமாற்றம் புரியும்
உயர் சேவை ஆற்றி சிறப்பர்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—